## த.வெ.க. ஆட்சியில்

# நீர் மேலாண்மையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய நிர்வாகத் தோல்வி!

## முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விமர்சனம்!

மன்னார்குடி, செப். 2-

முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இன்று வறண்டு கிடக்கும் வடுவூர் ஏரியைப் பார்க்கும்போது, அதன் நீர்ப்பிடிப்புத் திறனை அதிகரிக்க நான் பார்த்துப் பார்த்துச் செய்த பணிகள் அனைத்தும் மனதில் நிழலாடு கின்றன.

இதே நாளில், கடந்த ஆண்டு பசுமை எழில் கொஞ்ச, நீர் நிறைந்து, பறவைகள் புடைசூழ வடுவூர் ஏரி காட்சியளித்த அந்த ரம்மியமான தோற்றம் இன்னும் கண்முன்னே நிற்கிறது.

டெல்டாக்காரரான தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில், மக்களின் மனமும் இந்த மண்ணும் குளிர்ந்திருந்தன!

ஆனால் இன்று?

மன்னார்குடி வடுவூர் ஏரி வறண்டு கிடக்கிறது.

வயல்களில் விவசாயம் இல்லை.

சவளக்காரன், கீழநாலா நல்லூர், சித்தேரி உள்ளிட்ட பல பகுதிகளில் குடிப்பதற்குக் கூட போதுமான தண்ணீர் இல்லை. பெண்களும் முதியவர்களும் குடங்களுடன் அலைய வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.



காவிரி டெல்டாவில் குடிநீருக்கே தட்டுப்பாடு என்றால், அது வெறும் பருவநிலைப் பிரச்சினை யல்ல; நீர் மேலாண்மையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய நிர்வாகத் தோல்வி!

ஏரிகள் வறண்டால் விவசாயம் மட்டும் அழிவதில்லை. நிலத்தடி நீர் குறையும்; கால்நடைகள் பாதிக்கப்படும்; பறவைகள் விலகும்; ஒரு பகுதியின் ஒட்டுமொத்த வாழ்வாதாரச் சூழலே சிதைந்துவிடும்.

நீர் நிறைந்து செழித்திருந்த டெல்டாவை, ஒரே ஆண்டில் குடிநீருக்காகப் போராடும் நிலைக்குத் தள்ளியிருக்கிறார்கள்.

இந்த மண்ணின் தாகமும் மக்களின் தவிப்பும் ஆட்சியாளர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா?

வடுவூருக்கு நீர் வேண்டும்.

வயல்களுக்கு உயிர் வேண்டும்.

மக்களுக்குத் தடையற்ற குடிநீர் வேண்டும்.

இன்றைய ஆட்சியாளர்கள் அவர்களது அன்பிற்குரிய காங்கிரஸ் கூட்டாளிகளை அழைத்து கர்நாடகத்திலிருந்து சட்டரீதியாக நமக்குரிய நீரை உடனடியாகப் பெற்றுத் தருவதோடு, ஏரிகளையும் வாய்க்கால்களையும் முறையாகப் பராமரித்து, டெல்டா வின் நீராதாரங்களைப் பாதுகாக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## ஏமாற்றம்! ஏமாற்றம்! ஏமாற்றம்!

# மாற்றுத்திறனாளிகளுக்குச் சொன்னது ரூ.3000 கிடைத்ததோ ஏமாற்றம்!

## தி.மு.க. மாற்றுத்திறனாளி அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் காட்டம்!

சென்னை, செப். 2–

தேர்தல் வாக்குறுதியை நம்பி பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் துறையின் மீதான மானியக் கோரிக்கையும், அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிவிப்புகளும் மிகப்பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கின்றன என்பது தான் உண்மை.

இந்தச் சூழ்நிலையில், இன்றைய அறிவிப்புகளை நாம் இரண்டு முக்கிய கோணங்களில் பார்க்க வேண்டியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இந்த இரண்டுமே அடிப்படையான உரிமை சார் பார்வையிலிருந்து உருவாக்கப்பட்டவை அல்ல என்பதுதான் எங்களுடைய மிகப்பெரிய வருத்தம். உரிமையிலிருந்து விலகிச் செல்லும் இல்லம் சார்ந்த அணுகுமுறை ஒருபுறம், தமிழக அரசு மருத்துவ உதவி தேவைப்படுகின்ற மாற்றுத்திறனாளிகளுக்காக ஆங்காங்கே இல்லங்களை (Homes) உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வை அவர்களுடைய சமூகச் சூழலிலிருந்து பிரித்து, தனித்தனி இல்லங்களுக்குள் கொண்டு செல்வது என்பது நவீன மாற்றுத்திறனாளிகள் உரிமை இயக்கம் வலியுறுத்துகின்ற சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு (Community Based Rehabilitation) அல்லது சமுதாயம் சார்ந்த ஒருங்கிணைந்த மேம்பாடு (Community Based Inclusive Development – CBID) என்ற அணுகுமுறையோடு ஒத்துப்போவதில்லை.

மாற்றுத்திறனாளிகளை தனிமைப்படுத்தும் இல்லம் சார்ந்த அணுகுமுறையை விட, “மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் வாழ வேண்டும்; சமூகம் அவர்களுக்காக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதே நவீன உரிமை சார் அணுகுமுறை. ஐக்கிய நாடுகள் சபையின் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை (UNCRPD) வலியுறுத்தும் கண்ணியமான, சம உரிமை கொண்ட, சமூகத்தில் சுயாதீனமாக வாழும் உரிமை என்ற அடிப்படைக் கொள்கைகளோடு இத்தகைய இல்லம் சார்ந்த அணுகுமுறைகள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதையும் அரசு ஆழமாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது.



### மருத்துவ மாடலைக் கடந்து செல்ல வேண்டிய நேரம் இது!

மறுபுறம், நாம் ஏற்கனவே கடந்து வந்துவிட்ட மருத்துவ மாடல் (Medical Model) மற்றும் தானம்/தொண்டு சார்ந்த மாடல் (Charity Model) ஆகியவற்றின் தொடர்ச்சியாகத் தோன்றும் வகையில் சில திட்டங்கள், பயிற்சி நிலையங்கள் என்ற பெயரில் அறிவிக்கப்படுவது கவலைக்குரியது.

மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ சிகிச்சையும், மறுவாழ்வுப் பயிற்சிகளும் தேவையில்லை என்று நாங்கள் கூறவில்லை. தேவைப்படுகின்றவர்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சையும், மறுவாழ்வு சேவைகளும் நிச்சயமாகக் கிடைக்க வேண்டும். ஆனால் அந்த சேவைகள் மையப்படுத்தப்பட்ட சில பயிற்சி நிலையங்களில் மட்டுமே கிடைக்கும் வகையில் அமைவது போதுமானதல்ல. தமிழகம் முழுவதும் மருத்துவ சிகிச்சை, மறுவாழ்வு, உதவி சாதனங்கள், உளவியல் ஆதரவு, தொழிற்பயிற்சி மற்றும் பல்வேறு ஆதரவுச் சேவைகள் தேவைப்படுகின்ற ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு அருகிலேயே அந்த சேவைகள் கிடைக்க வேண்டும். ஒரு மாற்றுத்திறனாளி தனது கிராமத்திலிருந்து அல்லது நகரின் தொலைதூரப் பகுதியிலிருந்து பல கிலோ மீட்டர்கள் பயணம் செய்து ஒரு மையத்தை அடைந்து சேவையைப் பெற வேண்டிய நிலை இருக்கக் கூடாது. அருகாமையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், சமூக நல அமைப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் வழியாக இந்த சேவைகள் கிடைக்க வேண்டும். குறிப்பாக, “விழுதுகள் போன்ற One Stop Centre அணுகுமுறையின் கீழ், மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான பல்வேறு சேவைகளை அவர்களுடைய வாழ்விடத்திற்கு அருகாமையிலேயே வழங்கும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தால், அதை உண்மையான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வாகவும், உள்ளடக்கிய வளர்ச்சியாகவும் நாம் வரவேற்றிருப்போம். அதைவிடுத்து ஒன்றிரண்டு இடங்களில் பயிற்சி நிலையங்களை அறிவிப்பது, தமிழில் சொல்ல வேண்டுமானால், ”யானைப் பசிக்கு சோளப் பொறி? என்ற கேள்வியைத்தான் எழுப்புகிறது.

### மாற்றுத்திறனாளிகள் துறை எதற்காக?

தமிழகத்தில் மாற்றுத்திறனாளியாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒவ்வொரு மனிதரின் உரிமைகள், கண்ணியம், சமத்துவம், சுயசார்பு, சமூகப் பங்கேற்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகத்தான் இந்தத் துறை உருவாக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சிரமங்களை குறைப்பதும், அவர்களுக்கான தடைகளை அகற்றுவதும், சம வாய்ப்புகளை உருவாக்குவதும், சமூகத்தின் அனைத்து தளங்களிலும் அவர்கள் சமமாக பங்கேற்பதை உறுதி செய்வதுமே இந்தத் துறையின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால், மாற்றுத்திறனாளிகளுக்காக உருவாக்கப்பட்ட துறை, மாற்றுத்திறனாளிகளாக பிறக்காமல் இருப்பதை உறுதி செய்வது, அல்லது மாற்றுத்திறன் ஏற்படுவதைத் தடுப்பது போன்ற மருத்துவ மையப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது சரியான திசையா என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது.

“ஏதோ பிறந்துவிட்டீர்கள்; இனி உங்களைப் போன்றவர்கள் பிறக்காமல் பார்த்துக் கொள்கிறோம் என்ற தொனியில் அரசின் அணுகுமுறை அமைந்துவிடக்கூடாது.

### மாற்றுத்திறன் என்பது வெறும் மருத்துவப் பிரச்சினை அல்ல.

மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பெரும்பாலான தடைகள் அவர்களுடைய உடலில் மட்டும் இல்லை; அவை சமூகத்திலும், கட்டமைப்புகளிலும், மனப்போக்குகளிலும், வாய்ப்புகளின் பற்றாக்குறையிலும் இருக்கின்றன. எனவே, மாற்றுத்திறனாளிகள் துறை “மாற்றுத்திறனைத் தடுப்பது என்ற அணுகுமுறையை மட்டுமே முன்னிலைப்படுத்தாமல், ஏற்கனவே மாற்றுத்திறனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் பணியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

### சுகாதாரத்துறை முன்னெடுக்க வேண்டிய மருத்துவத் தடுப்பு நடவடிக்கைகள்!

மாற்றுத்திறனாளிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் உரிமைகள், வாழ்வாதாரம், சமூகப் பாதுகாப்பு, சம வாய்ப்பு மற்றும் கண்ணியமான வாழ்க்கை ஆகியவற்றை உறுதி செய்வது மாற்றுத்திறனாளிகள் துறையின் முதன்மைப் பொறுப்பு. இந்த அடிப்படை வேறுபாட்டை அரசு புரிந்துகொள்ள வேண்டும். போராடிய மாற்றுத்திறனாளிகளின் குரலை அரசு ஏன் கேட்க வில்லை இத்தனை எதிர்பார்ப்புகளுக்கிடையில் இன்று எங்களை மிகவும் வேதனைப்படுத்துவது என்னவென்றால், பல்வேறு சங்கங்கள் தங்களுடைய சக்தியை மீறி களத்தில் நின்றும், அவர்களுடைய கோரிக்கைகள் போதுமான அளவு கவனிக்கப்படவில்லை என்பதுதான். பார்வையற்றோர் சங்கங்களாக இருக்கட்டும்; பல்வேறு வகையான மாற்றுத்திறனாளிகள் சங்கங்களாக இருக்கட்டும்; மாவட்டம் தோறும் பல அமைப்புகள் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் போராடின.

### ஆடம்பரமான கோரிக்கை அல்ல.

‘‘மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகையை உயர்த்துங்கள் என்பதுதான் அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று. அன்றாட வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைச் சந்திக்கவே போராடிக் கொண்டிருக்கும் கடைக்கோடி மாற்றுத்திறனாளிகளின் குரல் அது.

ஆனால் அந்தக் குரலைக் கண்டு கொள்ளாமல், மேம்போக்கான சில அறிவிப்புகளை வெளியிட்டு கடந்து செல்வது கடும் கண்டனத்திற்குரியது.

### மாற்றுத்திறனாளிகளின் “Disability Cost” யார் புரிந்துகொள்வது?

ஒரு மாற்றுத்திறனாளியின் வாழ்க்கை சாதாரண வாழ்க்கையை விட பல மடங்கு அதிகமான செலவுகளை உள்ளடக்கியது. அவர்களுடைய குறைபாட்டின் தன்மை காரணமாகவோ, சமூகத்தில் நிலவும் தடைகள் காரணமாகவோ, அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கூடுதல் செலவுகளையும், கூடுதல் முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. சாதாரண மனிதர் எளிதாகச் செய்யக்கூடிய ஒரு காரியத்தைச் செய்வதற்கே ஒரு மாற்றுத்திறனாளி பல மடங்கு அதிகமாக உழைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

இதைத்தான் பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் போன்றவர்கள் ”Disability Cost என்ற கருத்தின் மூலம் விளக்கியுள்ளனர்.

மாற்றுத்திறனாளியாக இருப்பதற்கான செலவு என்பது மருத்துவச் செலவு மட்டுமல்ல. உதவி சாதனங்கள், போக்குவரத்து, துணை நபர்களின் உதவி, சிகிச்சை, மறுவாழ்வு, கல்வி, வேலைவாய்ப்பு, அன்றாட வாழ்க்கைக்கான கூடுதல் ஆதரவு என பல்வேறு செலவுகள் அவர்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து இணைந்து கொண்டே இருக்கின்றன. அதே நேரத்தில், பெரும்பான்மையான மாற்றுத்திறனாளிகள் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களாகவும் இருக்கிறார்கள்.

அன்றாட வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கே போராடிக் கொண்டிருக்கின்ற பல மாற்றுத்திறனாளிகள், அரசு வழங்கும் மாதாந்திர உதவித்தொகையை மட்டுமே நம்பி வாழும் சூழ்நிலையில் உள்ளனர். இந்நிலையில், குறைந்தபட்சம் ரூ.500 கூடுதலாக உயர்த்தி வழங்கியிருந்தால்கூட, கடைக்கோடி மாற்றுத்திறனாளிகளின் மனதில் ஒரு நம்பிக்கை பிறந்திருக்கும்.

“இந்த அரசு எங்களையும் நினைத்திருக்கிறது என்ற ஒரு உணர்வு அவர்களிடம் உருவாகியிருக்கும். ஆனால், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ள நிலையில், அவர்களுடைய வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக் கொண்டிருக்கும்போது, உதவித்தொகையில் போதுமான உயர்வு இல்லாமல் இருப்பது உண்மையிலேயே வேதனையளிக்கிறது.

### எதிர்பார்ப்பு இன்னும் உயிரோடு இருக்கிறது!

இன்று எங்களுடைய மனதில் கோபத்தைவிட வேதனைதான் அதிகமாக இருக்கிறது. ஏனெனில் இது வெறும் ஒரு பட்ஜெட் அறிவிப்பு தொடர்பான ஏமாற்றம் அல்ல.

இது மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம், உரிமை, கண்ணியம் மற்றும் எதிர்காலம் தொடர்பான எதிர்பார்ப்புகளின் ஏமாற்றம்.

“எங்களைப் பற்றி எங்களிடம் கேளுங்கள்; எங்களுக்கான திட்டங்களை எங்களுடன் இணைந்து உருவாக்குங்கள் என்பதே மாற்றுத்திறனாளிகள் இயக்கங்களின் நீண்டகால கோரிக்கை.

Nothing About Us Without Us “எங்களைப் பற்றி எதுவும் எங்களில்லாமல் இல்லை என்ற மாற்றுத்திறனாளிகள் உரிமை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை தமிழகத்திலும் நடைமுறைக்கு வர வேண்டும்.

அரசின் ஒவ்வொரு திட்டமும் மாற்றுத்திறனாளிகளின் உண்மையான தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். அவர்களுடைய குரல் கேட்கப்பட வேண்டும்!.

### அவர்களுடைய அனுபவம் மதிக்கப்பட வேண்டும்.!

அவர்களுடைய பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் அவர்களுடைய உரிமைகள் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும். அதுவே உண்மையான உள்ளடக்கிய ஆட்சி.

இன்று பெரும் ஏமாற்றத்துடன் இந்தக் கருத்துகளை நாம் பதிவு செய்கிறோம். ஆனால் எங்களுடைய எதிர்பார்ப்பு இறந்துவிடவில்லை. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைப் போராட்டம் தொடரும். அவர்களுடைய குரல் தொடர்ந்து ஒலிக்கும். அவர்களுடைய கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்படும்.

அரசு தன்னுடைய அறிவிப்புகளை மறுபரிசீலனை செய்து, கடைக்கோடி மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் துயரத்தை புரிந்து கொண்டு, அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பையும் உதவித்தொகையையும் உயர்த்தி, உரிமைசார் மற்றும் உள்ளடக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கையை நாங்கள் இன்னும் கொண்டிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்திருக்குமேயானால், இந்த நேரத்தில் பல மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகையை உயர்த்தி வழங்கி, அவர்களுடைய முகங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும்!

ஆனால் இன்று அந்த மகிழ்ச்சிக்கு பதிலாக எங்களுடைய மனங்களில் குடிகொண்டிருப்பது பெருத்த ஏமாற்றம்! ஏமாற்றம்! ஏமாற்றம்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# உலகின் மிகப்பெரிய பொய்யர் யார்?



Faith forum: Mohan Bhagwat attends the ‘Universal Oneness celebration’ at New York’s Madison Square Garden on Saturday. PTI

**புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் பாடல் வரிகளில் சில இன்றைய நாளேடுகளைப் படித்தவுடன் நினைவில் முந்திக் கொண்டது.**

**அந்த வைர வரிகள்**

**“பொய்யிலே**
**முக்காற்படி**
**புரட்டிலே காற்படி**
**வையகம் ஏமாறும்படி”**

**இஸ்லாமியர்கள் இல்லாத பாரதத்தை ஆர்.எஸ்.எஸ் ஏற்காதாம்!**

**உத்தமர் காந்தியார் தொடங்கி**
**மருத்துவர் தபோல்கர்**
**அறிஞர் பன்சாரே**
**கல்வியாளர் கல்புர்கி**
**கௌரி லங்கேஷ் வரை**
**எத்தனைப் பட்டப்பகல்**
**படுகொலைகள் !**
**மேற்குறிப்பிட்ட ஆளுமைகள் எதற்காக**
**நின்றார்கள்! எதற்காகக் களம் கண்டார்கள்**
**எதற்காகச் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.**

**2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு**
**இந்துத்வா கும்பல்கள்**
**சிறுபான்மையினர், தலித்துகள் மீது**
**நடத்திய கொலைவெறி**
**கொடுமையான தாக்குதல்கள்**
**எத்தனை? எத்தனை?**

**தமிழ் நாட்டின் ஊர் புறங்களில்**
**திடீர் புளுகன் அண்டப் புளுகன்**
**ஆகாசப் புளுகன் என்று**
**பொய்யர்களை**
**வகைப்படுத்துவது உண்டு .**

**இந்த மூன்றுவகை புளுகர்களை**
**மிஞ்சிவிட்டார்! இட்லரின்**
**கோயபல்ஸையும் தோற்கடித்துவிட்டார்**
**பகவத் புளுகர்**
**அமெரிக்க டிரம்ப் கூட அலறிப்போய்**
**இருப்பார்!**



பேராசிரியர். மு.நாகநாதன்

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் பொ. பத்மநாபன்

### செப்டம்பர் 2 (1991)



**திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “அண்ணா விருது” பெற்றவர்.**


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெ. வைத்திலிங்கம்

### செப்டம்பர் 2 (2013)



**1959ல் தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**புதுச்சேரி மாநிலம், முத்தியால்பேட்டை தொகுதியின் செயலாளர், அவைத்தலைவர், மாநில பிரதிநிதி மற்றும் புதுச்சேரி வடக்கு பகுதி துணைச் செயலாளர் போன்ற பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**புதுச்சேரி மாநிலக் கழக மூத்த முன்னோடியான இவர், இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**